155

✝

கோயமுத்தூர்

# எஸ். பி. ஜி. மிசியோன்
# அபிஷேகநாதர் ஆலயம்.

அறுப்புக்கால உற்சவ ஜெப முறைமை.

## பெரிய வெள்ளிக்கிழமை.

:)o(:

மூன்றுமணி தியான ஆராதனையில்
பாடவேண்டிய ஞான கீதங்கள்
ஞான கீர்த்தனைகள்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் திருநாளில்
பாடவேண்டிய ஞான கீர்த்தனைகள்
அடங்கியது.

Coimbatore, 4th April 1914. } S. Pakkianadhan, Prisst S. P. G.

Printed at the Emmanuel Press, Coimbatore.

இதன் விலை அணா 1.

Qb:417.2118.
N14
121673

கோயமுத்தூர்

# எஸ். பி. ஜி. மிசியோன்

# அபிஷேகநாதர் ஆலயம்.

## HARVEST FESTIVAL SERVICE.

அறுப்புக்கால உற்சவத்தில் வழங்கவேண்டிய

ஜெப முறை.

---

### ஆரம்பம் ஞானகீதம். **277**

அதிசயமாய் நம்மை
   காப்பாற்றிடுங் கர்த்தாவை,
அநேக நன்மையால்
   ஆட்கொண்ட நம் பிரானை
இப்போது ஏகமாய்
   எல்லாரும் போற்றுவோம்;
மா நன்றி கூறியே,
   சாஷ்டாங்கம் பண்ணுவோம்.

தயாபரர் என்றும்
   நம்மோடிருப்பாராக,
கடாட்சங் காண்பித்து
   மெய் வாழ்வை ஈவாராக;
மயங்கும் வேளையில்
   நேர் பாதை காட்டுவார்;
இம்மை மறுமையில்
   எத்தீங்கும் நீக்குவார்.

வானுதி வானத்தில்
மாண்பாக அரசாளும்
பிதா, குமாரனும்,
ஆவியுமாம், ஏகர்க்கும்
விண்ணோரும் மண்ணோரும்
நீடூழிகாலமே
புகழ்ச்சி, ஸ்தோத்திரம்
செலுத்துவார்களே. ஆமென்.

## பிரசங்கத்துக்கு முன்

¶ ஆராதனை ஆரம்பத்தில் வாசிக்கவேண்டிய வாக்கியங்கள்:

1. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. சங்: 24. 1.

2. அந்தந்தப்பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத்தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம். எரே: 5. 24.

3. உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது. எரே: 5. 25.

4. உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக்கனம்பண்ணு நீதி: 3. 9.

5. உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். யாத் 23. 25.

6. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால், நீ உன் தானியத்தையும் உன் திராட்ச ரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன் மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருக ஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன், நீ சாப்பிட்டுத்திர்ப்தியடைவாய் என்கிறார். உபா: 11. 13-15.

7. இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்ருர். பரி மத். 9. 37-38.

¶ "கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடி" என்னும் சங்கீதத்திற்குப் பதிலாக பின்வரும் வாக்கியங்களை வாசிக்க அல்லது பாடவேண்டும்.

1. கர்த்தரைத்துதியுங்கள்; நம்முடைய தேவனைக்கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது: துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது.

2. கர்த்தர் எருசலேமைக் கட்டுகிருர்: துரத்துண்ட இஸ்ரவேலரைக்கூட்டிச் சேர்க்கிருர்.

3. இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிருர்: அவர்களுடைய காயங்களைக் கட்டுகிருர்.

4. அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிருர்.

5. அவர் மிருகஜீவன்களுக்கும், கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிருர்.

6 எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி: சீயோனே, உன் தேவனைத்துதி.

7. அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப்பலப்படுத்தி: உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிருர்.

8. அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி: உசிதமான கோதுமையினல் உன்னைத்திருப்தியாக்குகிருர். சங்கீதம் 147.

விசேஷித்த சங்கீதங்கள். 65, 67, 127 அல்லது 104, 145.

1. பாடம்: உபா: viii. 7-முடிவு.

2. பாடம்: பரி மத: xiii. 24-31.

¶ பின்பு காலை ஜெப ஒழுங்கில் மூன்ருவது சுருக்க ஜெபம்வரையிலும் வாசிக்கவேண்டும். இந்த ஆராதனை ஓய்வுநாளல்லாத மற்ற நாளில் நடக்குமானல், அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்திற்குப் பதிலாகப் பின்வரும் சுருக்க ஜெபத்தை வாசிக்கவேண்டியது.

121673

மிகுந்த கிருபையுள்ள பிதாவே, சமுசாரியின் உழைப்பை பூமியின் பலன்களினால் ஆசீர்வதித்திருக்கிறீர் இந்த நன்மைகளுக்காக முழுமனதோடு உம்மைத்தாழ்மையாய்ஸ்தோத்திரிக்கிறோம். தேவரீருக்குமகிமையாகவும் எங்களுக்கு ஆறுதலாகவும் எங்கள் தேசம் இன்னும் அதிகப்பலன் கொடுக்கும்படி உமது அன்புள்ள தயவை எங்கள்மேல் இடைவிடாமல் பாராட்டிக்கொண்டேவரும்படி எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்-ஆமென்

---

## ஞான கீதம் 285.

காலந்தோறும் தயவாக
  தேவரீர் அளித்திடும்
பலவித நன்மைக்காக
  என்ன ஈடுதான் தரும்?
எங்கள் வாயும் உள்ளமும்
என்றும் உம்மைப் போற்றிடும்.

மாந்தர் பண்படுத்தி வித்தை
  பூமியில் விதைக்கிறார்;
கர்த்தரோ அன்பாக அதை
  முளைத்தோங்கச் செய்கிறார்;
ஏற்ற காலம் மழையும்
பெய்து பூண்டை நனைக்கும்.

உம்முடைய சித்தத்தாலே,
  காற்று வெய்யில் வீசுமே,
கால மழை பனியாலே
  பயிர்கள் செழிக்குமே;
உழுவோர் பிரயாசம் நீர்
சித்தியாகச் செய்கிறீர்.

ஆதலால் மகிழ்ந்து நாங்கள்
  உம்மை அன்பாய்த் துதிப்போம்;
தாழ்மையோடு உமக்கெங்கள்
  நெஞ்சத்தையே படைப்போம்;
தேகம் போஷிக்கின்ற நீர்
  ஆவியையும் போஷிப்பீர். ஆமென்.

¶ பிரசங்கத்திற்குப் பின் காணிக்கை வாசகத்தில் இரண்டொரு வாக்கியங்களை வாசிக்கவேண்டும். அப்பொழுது பொருளும் விளைவின் பலன்களும் காணிக்கையாக வாங்கப்படும். குருவானவர் காணிக்கையை வாங்கி நற்கருணை மேசையிலாகிலும்கிராதி அறைக்குள்ளாகிலும் விநயமாய்ப் படைத்துவைக்கவேண்டும்.

---

## காணிக்கை வாங்கும்போது

### ஞான கீர்த்தனை.

பல்லவி.

மனிதர் உங்கள்நற், கிரியைகண்டு
மாசில்லாநாதன் மகிமைக்கென்று
தினமும்வீசிட உங்கள் ஒளி,
செய்யுங்கள்காணிக்கை, பொன்வெள்ளியும்

அனுபல்லவி.

தானஞ்செய்ய ஏசுகேட்கிறாரே
கேட்கிறாரே, கேட்கிறாரே
தானஞ்செய்ய ஏசுகேட்கிறாரே
கேட்கிறாரே உங்களையும்

1 பொன் வெள்ளி ரத்தினம் தான்கொடுத்து
உன்மனதைக்கொடா தென்னத்துக்கு
பொன் வெள்ளித் தட்டோடுன்னுள்ளத்தையே
பூர்த்தியாய்ச்சாஷ்டாங்கம் செய்குவாயே— தான

2 பூமியில் பொக்கிஷம் என்னத்துக்கு
பொல்லாமனுஷர் கன்னமிடுவார்
சாமியிடத்தினிற் சேர்த்துவைத்தால்
சந்ததமுனையாசீர்வதிப்பார்.— தானம்.

3 ஆலயத்தில் போடுங்காணிக்கையை
ஆண்டவர்க்குச் செய்வதாக எண்ணி
நல்மனதோடே யீயவேண்டும்
நாயனுன் மனதைப் பார்க்கிறாரே.— தானம்.

4 வானபிதா தந்த ஆஸ்தியிலே
வறிஞர்க்கு முகங்கோணவேண்டாம்
வாங்குவதிலும் கொடுப்பதுவே
வாசியென்று கர்த்தர் சொல்லுகிறார்.— தானம்.

5 ஏழைகள் நம்மோடெக்காலமுமே
இருப்பதைநாம் காண்கிறோமே
ஏழைக்கிரங்குவோன் கர்த்தருக்கு
இரவல் கொடுப்பானென்றறிவீர்.— தானம்.

6 நன்றுசெய்து தானதர்மம் பண்ண
நாமொருநாளும் மறக்கலாகா
தென்றுமப்படிப்பட்ட பலிகள்
தேவனுக்குகந்த தென்கிறாரே.— தானம்.

¶ அதின்பின் ஜனங்கள் முழங்கால்படியிட்டிருக்க குருவானவர் பின் வருகிறபடி பாட அல்லது சொல்லவேண்டும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறு: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, உமதுகிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது, அவைகளையெல்லாம் ஞானமாய்ப்படைத்தீர்.

மறு: பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது. சங்: 104-24.

குரு: எழும்பு எழும்பு, பெலன்கொள் கர்த்தரின்புயமே.

மறு: முந்தின நாட்களிலும் பூர்வதலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு. ஏசா: 51. 9.

குரு: வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்.

மறு: உமது பாதைகள் நெய்யாய்ப்பொழிகிறது. சங் 65. 11.

குரு: ஐசுவரியமும் கனமும் உம்மாலேவருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர். 1 நாளா: 29. 12.

மறு: எல்லாம் உம்மால் உண்டானது; உமதுகரத்திலே வாங்கி உமக்குக்கொடுத்தோம். 1 நாளா 29. 14.

குரு: கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். சங்: 126. 5.

மறு: தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார். பரி: மத்: 3. 12.

குரு: என் ஆத்துமாவே, கர்த்தரைஸ்தோத்திரி; என்முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.

மறு: என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே சங்: 103-2.

## ஜெபம். 5.

இரக்கமுள்ள தேவனே, உமது கையைத்திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்கி பூமியை விசாரித்து நீர்ப்பாய்ச்சி அதை ஆசீர்வதித்து வருகிறீர். தேவரீர் கிருபைகூர்ந்து செய்கிற சகல நன்மைகளுக்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். எங்கள் சரீர சம்ரட்சணைக்காகவும் விசேஷமாய் எங்கள் ஆத்துமாவின் ஞானுகாரத்திற்காக தேவரீர் எற்படுத்தியிருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும் உம்மைப்போற்றுகிறோம். கர்த்தாவே நாங்கள் கடைசியில் உமது பரமகளஞ்சியத்தில் சேர்க்கப்படத் தகுந்தவர்களாகும்படி நாளுக்குநாள் உமது கிருபையை அடைந்து தேறவும் உமது திருச்சபையில் வளர்ந்தோங்கவும் அருள் புரியவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தாழ்மையாய் மன்றாடுகிறோம் சுவாமி. ஆமென்.

ஆசீர்வாதம்.

✠

# பெரிய வெள்ளிக்கிழமை

———:o:———

## மூன்றுமணி தியான ஆராதனை.

———

### சிலுவைக்கீதம்.

பல்லவி

குருசினில் தொங்கியே குருதியும் வடியக்
கொல்கதா மலைதனிலே—நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர் கோலம்
கூர்ந்து பார் நீ பாவி!

சரணங்கள்.

1. சிரசினில் முண்முடி உறுத்திடச் சூடியே
சிலுவையில் சேர்த்தையோ!—தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளறைந்தார்
சேனைத்திரள் சூழ— குரு.

2. பாதகர் நடுவில் பரவியினேசன்
பாதகன்போல் தொங்க—யூதப்
பாதகர் பரிகாசங்கள் நிந்தை
பண்ணிய கொடுமைதனை— குரு.

3. சந்திர சூரிய சகலவான் சேனைகள்
சகிக்காமல் நாணுதையோ—தேவ
சுந்தர மைந்தனுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ?— குரு.

4. ஈட்டியால் சேவகன் எட்டியேகுத்த
இறைவன் விலாவதிலே—அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் சகலமும்
திறந்தூற் றோடுதுபார்!— குரு.

5. மார்த்தாள் மரியாள் மகதலனூராள்
மற்றுமுள்ள பத்தினிமார்—ஐயோ!
பார்த்துள மேங்கிப் பரதவித் தழுதார்
டண்ணவன் பதமணைந்தே— குரு.

6. எருசலே மாதே மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ?—நின்
எருசலே யதிபன் இளமண வாளன்
ஏற்ற கோலமீதோ— குரு.

7. ஏசுந சரேத்தான் யூதர்க ளரசன்
ஏறிய குருசுதனை—நித்தம்
ஏசவும் அடியார் இதையத் தெழுதி
இருக்கக் கிருபை செய்யும்— குரு.

51-ம் சங்கீதம் முழங்காலில் நின்றுபாடல்.

சில ஜெபங்கள்.

---

## I. ஞான கீதம் 72.

துக்கங்கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்;
திகில் கலக்கங் கொள்ளுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

போர்வீரர், யூதர் நிந்தித்தும்
மா பொறுமையாய்ச் சகித்தார்;
நாமோ புலம்பி அழுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

கை, காலே ஆணி பீறிற்று,
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

நரர்க்காய்த் திவ்விய அன்பினால்
மா மௌனமாய் மன்றாடினார்;
நல் எழு வார்த்தை உரைத்து,
இயேசு சிலுவையில் மாண்டார்.

அவர் விலாவின் உதிரம்
திவலையாய் நம்மேல் விட்டார்;
அவர் பாதத்தைப் பணிவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

ஆ இயேசு ஸ்வாமீ, தாசர்க்கு
பெருகிப் பாய்ந்திடுங் கண்ணீர்,
உருகும் நெஞ்சும் ஈயுமே
நீர் சிலுவையிலே மாண்டீர்.

பிரசங்கம் முதல் வசனம்.

"பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" பரி: லூக்கா 23. 34.

தனி ஜெபம்

¶ எல்லாரும் சேர்ந்து சொல்லவேண்டியது:—

கிறிஸ்துவின் சரீரமே! என்னை இரட்சி;
கிறிஸ்துவின் இரத்தமே! என்னை இளைப்பாற்று;
கிறிஸ்துவின் விலாவிலிருந்து பொழிந்த தண்ணீரே!
என்னைச் சுத்தப்படுத்து.
கிறிஸ்துவின் பாடுகளே! என்னைப்பலப்படுத்து
அருமையேசுவே என் ஜெபத்தைக்கேளும்.
உமது காயங்களில் என்னை மறையும்
நான் உம்மைவிட்டுப் பிரியாதிருக்கச்செய்யும்
துரோகசத்துருவுக்கு என்னைக்காரும்
மரணவஸ்தையில் என்னைக்கூப்பிட்டு
நான் உம்மண்டைவர அழையும்
நான் எப்போதும் உம்மண்டை வாழவும்
உமது பக்தருடன் உம்மைத்துதிக்கவும்
அருள் புரியும். ஆமென்.

## II. ஞான கீதம். 73

கூர் ஆணி தேகம் பாய
 மா வேதனைப்பட்டார்;
'பிதாவே, இவர்கட்கு
 மன்னிப்பீயும்' என்றார்.

தம் ரத்தஞ் சிந்தினோரை
 நல் மீட்பர் நிந்தியார்;
மா தேவ நேசத்தோடு
 இவ்வாறு ஜெபித்தார்.

எனக்கே அவ்வுருக்கம்,
 எனக்கே அச்செபம்,
அவ்வித மன்னிப்பையே
 எனக்கும் அருளும்.

நீர் சிலுவையில் சாக
 செய்ததென் அகந்தை
கடாவினேன். இயேசுவே,
 நானுங் கூர் ஆணியை.

உம் சாந்தக் கண்டிதத்தை
 நான் நித்தம் இகழ்ந்தேன்;
எனக்கும் மன்னிப்பீயும்,
 எண்ணாமல் நான் செய்தேன்.

ஆ, இன்பநேச ஆழி!
 ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
 செய்பாவம் மன்னியும்.

### பிரசங்கம் இரண்டாம் வசனம்.

"இன்றைக்கு நீ என்னுடனே கூடப்பரதீசிலிருப்பாய்."
பரி லூக்கா 23. 43.

தனி ஜெபம்.

## III. ஞான கீதம். 74.

‘உம் ராஜியம் வருங்காலே, கர்த்தரே,
அடியேனை நினையும்’ என்பதாய்
சாகுங் கள்ளன் விஸ்வாச நோக்காலே
விண் மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமும் கண்டிலாரே;
தம் பெலனற்ற கையை நீட்டினார்;
முட்கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

ஆனாலும் மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கு ‘இன்று என்னுடன்
மெய்யாய் நீ பரதீஸிலிருப்பாய்’
என்பதுவாம்—விஸ்வாசத்தின் பலன்.

கர்த்தாவே, நானுஞ் சாகும் நேரத்தில்;
‘என்னை நினையும்’ என்று ஜெபித்தே,
உம் சிலுவையைத் தியானஞ் செய்கையில்,
உம் ராஜியத்தைக் கண்ணுறச் செய்யுமே.

ஆனால், என் பாவம் நினையாதேயும்,
உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர்;
உம் திருச்சாவால் பாவமன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

‘என்னை நினையும்;’ ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பங் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்தவேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

‘என்னை நினையும்;’ நான் மரிக்கும் நாள்,
‘நீயும் என்னோடு தங்குவாய் இன்றே
நற்பரதீஸில்’ என்னும் உம் வாக்கால்
என் ஆவி தேர்ந்து மீளச் செய்யுமே.

பிரசங்கம் மூன்றும் வசனம்.

தாயை நோக்கி “ஸ்திரியே அதோ உன் மகன்” சீஷனை நோக்கி “அதோ உன் தாய்” என்றார் யரியோவான் 19. 26.

தனிஜெபம்.

## IV. ஞான கீதம். 75.

சிலுவையைப் பற்றி நின்று
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினர் அன்றாள்;
தேவமாதா மயங்கினர்;
சஞ்சலத்தால் கலங்கினர்;
பாய்ந்ததாத் துமாவில் வாள்.

பாக்கியவதி மாதா. உற்றார்
சிலுவையை நோக்கிப்பார்த்தார்;
அந்தோ. என்ன வேதனை!
ஏகபுத்திரனிழந்து.
துக்கசாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னை.

இணையிலா இடருற்ற
அன்னை அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தேவ மைந்தன் தாயார் இந்த
துக்கபாத்திரம் அருந்த
மாதாவோடழார் யாரோ?

தம் குமாரன் காயப்பட,
முட்கிரீடஞ் சூட்டப்பட,
இந்த நிந்தை நோக்கினர்;
நீதியற்ற தீர்ப்புப்பெற,
அன்பர், சீஷர் கைவிட்டோட,
அவர் சாகவுங் கண்டார்.

அன்பின் ஊற்றாம் இயேசு ஸ்வாமீ,
உமதன்னைக்குள்ள பக்தி
என்றன் நெஞ்சில் ஊற்றிடும்;
அன்பினல் என் உள்ளம் பொங்க,
அனல் கொண்டகம் உருக
அருளைக் கடாட்சியும்.

பிரசங்கம் நான்காம் வசனம்.

"என் தேவனே! என் தேவனே! என் என்னை கைவிட்டீர்"
பரி மாற்கு 15. 34.

ஞானகீதம் 340. III சிலுவைச்சரிதை.

குருசில் அறையுண்ட
  மனிதனைய்
உம்மை நோக்குகின்றேன்—
  எனக்காய்.

கூர் முள் உம் கிரீடமாம்,
  குருசாசனம்;
சிந்தினீர் எனக்காய்
  உம் ரத்தம்.

உம் தலை சாயவோ
  திண்டு இல்லை;
கட்டையாஞ் சிலுவை
  உம் மெத்தை.

ஆணி கை கால், ஈட்டி
  பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக்கங்கில்லை
  எவரும்.

பட்டப்பகல் இதோ
  ராவாயிற்றே;
தூரத்தில் நிற்கின்றார்
  உற்றாரே.

ஆ பெரும் ஓலமே!
  தோய் சோரியில்
உம் சிரஞ் சாய்க்கிறீர்
  மார்பினில்.

சாகுங் கள்ளன் உம்மை
  நிந்திக்கவும்,
சகிக்கின்றீரோ நீர்
  என்றாலும்?

7A
9.34

தூரத்தில் தனியாய்
உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது
நிற்கின்றார்.
"இயேசு நசரேத்தான்
யூதர் ராஜா'
என்னும் விலாசம் உம்
பட்டமா?
பாவி என் பொருட்டு
மாளவும் நீர்
என்னில் எந்நன்மையை
காண்கின்றீர்?

---

## V. ஞான கீதம். 76.

துயருற்ற வேந்தரே,
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே;
எண்ணிறந்த துன்பம் நீர்
மௌனமாகச் சகித்தீர்.

பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்,
மூன்று மணி நேரமாய்,
துணையின்றி மௌனமாய்
பேரிருளில் தேவரீர்
பேயோடே போராடினீர்.

தேவ ஏக மைந்தனர்,
அபிஷேக நாதனர்,
'தேவனே, என் தேவனே,
என்னை ஏன் கைவிட்டீரே?'
என்றுரைக்கும் வாசகம்
கேள்! இதென்ன அற்புதம்!

துயர் திகில் இருண்டே
சூழும்போது, தாசரை
கைவிடாதபடி நீர்
கைவிடப்பட்டிருந்தீர்;
இக்கட்டில் சமீபம் நீர்
என்றிதாலே கற்பிப்பீர்.

பிரசங்கம் ஐந்தாம் வசனம்.

"தாகமாயிருக்கிறேன்" பரி: யோ: 19. 29.

தனி ஜெபம்.

---

## VI. ஞான கீதம். 62.

ஆ, ரத்தம், காயம், குத்தும்
  நிந்தையும் நிறைந்தே,
முட்கிரீடத்தாலே சுற்றும்
  குத்துண்ட சிரசே,
முன் சால மேன்மை கொண்ட
  நீ நிந்தை காண்பதேன்?
ஐயோ, வதைந்து நொந்த
  உன் முன் பணிகிறேன்.

நான் உம்மைத் தாழ்மையாக
  வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
  துதிப்பேன், இயேசுவே;
நான் உம்மில் ஊன்றிநிற்க
  சகாயராயிரும்;
உம்மோடு நான் மரிக்க
  நீர் தயைசெய்திடும்.

என் மூச்சொடுங்கும் அந்த
  கடை இக்கட்டிலும்
நீர் எனக்காய் இறந்த
  உம் கோலங் காண்பியும்;

உம் சிலுவையைப் பார்த்து
உம் நேச மார்பிலே
அன்புடன் நானுஞ் சாய்ந்து
தூங்கட்டும், இயேசுவே. ஆமென்.

பிரசங்கம் ஆறும் வசனம்.

"முடிந்தது" பரி: யோ: 19. 28.

தனி ஜெபம்.

---

## VII. ஞான கீதம். 78.

பூரண ஜீவியமே!
தேவாசனம் விட்டு,
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது!

பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்;
தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

அவர் படாத் துக்கம்
நரர்க்கு இல்லையே;
உருகும் அவர் நெஞ்சிலும்
நம் துன்பம் பாய்ந்ததே.

முள் தைத்த சிரசில்
நம் பாவஞ் சுமந்தார்;
நாம் சுத்தராகத் தம் நெஞ்சில்
நம் ஆக்கினை ஏற்றார்.

எங்களை நேசித்தே,
எங்களுக்காய் மாண்டீர்;
ஆ, சர்வபாவப் பலியே,
எங்கள் சகாயர் நீர்.

எத்துன்ப நாளுமே,
மா நியாயத்தீர்ப்பிலும்,
உம் புண்ணியம், தூய மீட்பரே,
எங்கள் அடைக்கலம்.

இன்னும் உம் கிரியையை
எங்களில் செய்திடும்;
நீர் அன்பாய் ஈந்த கிருபைக்கே
எம் அன்பு ஈடாகும். ஆமென்.

பிரசங்கம் ஏழாம் வசனம்.

"பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" பரி: லூக்: 23. 46.

---

## VIII. ஞான கீதம். 79.

இப்போது, நேச நாதா, தலை சாய்த்து
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது;
பொங்கு நெஞ்சம் மூச்சற் றொடுங்கிற்றே.

சாமட்டுஞ் சாந்தமாய் என் துக்கப்பாரம்
நீர் தாங்கி, மனதார மரித்தீர்;
உம் சாவில் பெலன் உற்றே, ஆவியையும்
அமைதலாய்த் தந்தைக் கொப்புவித்தீர்.

நல் மீட்பரே, சாவிருள் என்னைச் சூழ்ந்து,
மரண அவஸ்தை உண்டாகையில,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து,
ஒளி உண்டாக்கும் அச்ச ராவினில்.

நான் மாளும்போதுஞ் சிலுவையைக்காட்டும்;
என் தலையை உம் மார்பில் அணைத்தே,
என் கடைமூச்சை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்;
அப்பால் உம் நித்திய ஓய்வு என்னதே.

சில ஜெபங்கள்.

## IX. ஞான கீர்த்தனை. (காணிக்கை வாங்குதல்.)

1. அன்பின் தெய்வகிருபாசமுத்திர
ஆழமே தயாபரா நீர்
அளவில்லாத, அளவில்லாத, அளவில்லாத,
அகோர வாதைகளாகியே துயரானீரோ.

2. ஆத்ம வியாகுல, மேவிப் பிரலாபித்த
ஆண்டவா யேசுநாதனே நின்
அரியமேனி, அரியமேனி, அரியமேனி,
எல்லாம் இரத்தவேர்வைகளாகியுஞ் சோபமானீ
[ரோ!

3. பிரதானாசாரியன் வீட்டிலும் போந்து
பிலாத்துவின் வீட்டிலும் ஏகியே நீர்
பிரியமாக, பிரியமாக, பிரியமாக,
வன்பாடுபட்டு மெய்சோரி சிந்தவுமானீரோ!

4. மூவுலகம், படைத்தாண்டு ரட்சிக்கும்
முன்னவா யேசுநாதனே நீர்
முள்ளினாலே, முள்ளினாலே, முள்ளினாலே,
கொடூரமாய் முடிசூட்டவுந் துயரானீரோ!

5. பாரச்சிலுவை சுமந்து நடுங்கிப்
பரதாபமாய் கொல்கதாவிலே நீர்
பரமதேவா, பரமதேவா, பரமதேவா,
இப்பாடுபட்டெனை யாளவுங் கிருபையானீரோ!

6. ஜீவனாதிப்பிதாவின் குமாரன் நீர்
தீய பாவிகட்காகவே யோர்
சிலுவைமீது, சிலுவைமீது, சிலுவை
மீதினில் உயிர்விட, வேனே மனதானீரோ!

ஆசீர்வாதம்.

# கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

## I.

பல்லவி.

வந்தனம் வந்தனம் வல்லப கிறிஸ்தேசர்க்கே
சந்ததம் சந்ததம் சுவாமி ஏசுநாதர்க்கே.

அனுபல்லவி.

இன்றறைக்குழியினின், றேயெழுந்த நேசர்க்கே.

சரணங்கள்.

1 துட்டர்கள் காவலும்
சுரருமிடைந்தனர்
கெட்டமாவலகையோ
கொடுநரகமடைந்தது
மட்டில்லா ஜெயம் ஜெயம், மானுவேல் மகத்வர்க்கே.

2 ஞாயிறெழுமுன்னே,
நாயகரெழுந்தனர்
பேயையுஞ் சிறைசெய்த
பெலத்தபராக்ரமனிவர்
வாயு மனமுமொன்றாய், வாழ்த்துவோகமத்வர்க்கே.

3 ஜீவனை விட்டவர்
ஜெயித் துயிர்த்தெழுந்தனர்
பாவமும் சாபமும்
பறந்தன யிறந்தன
தேவரீர்க்கல்லேலூயா, தினம் தினமுண்டாகவே.

## II. கண்ணிகள்.

பல்லவி.

ராஜாதி ராஜன் ஏசு ஏசு மகாராஜன்
அவர் ராஜ்யம் புவியெங்கும் மகா மாட்சிமை
அவர் திருநாமமே விளங்க [யாய் விளங்க

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயாவே
அல்பாஒமேகா அவர்க்கே அல்லேலூயாவே.

சரணங்கள்.

1 உன்னதத்தின் தூதர்களே
ஒன்றாகக் கூடுங்கள்
மன்னா யேசு நாதருக்கே
வான்முடி சூட்டுங்கள்.

2 நாலா தேசத்திலுள்ளோரே
நடந்து வாருங்கள்
மேலோ னேசுநாதருக்கே
மெய்முடி சூட்டுங்கள்.

3 நல்மனதோடே சொல்கிறேன்
நாட்டோர்களே கேளுங்கள்
புன்னகைகொண்டு நிற்பானேன்
பூமுடி சூட்டுங்கள்.

4 இந்தியா தேசத்தார்களே,
ஏகமாய்க்கூடுங்கள்
பூந்தானங்கள் அற்பமென்றே
பொன்முடி சூட்டுங்கள்.

5 சின்ன நாடுகளைவிட்டு
சீக்கிரம் ஏகுங்கள்
பொன்னகராம்சாலேமுக்கு
போய்முடி சூட்டுங்கள்.

6 ரத்தச்சாக்ஷிமாரே யுங்கள்
சத்தியம் சொல்லுங்கள்
முத்தமிட்டேசுவை யெங்கள்
மும்முடி சூட்டுங்கள்.

7 குற்றமில்லாப் பாலகரே
கூடிக்குலாவுங்கள்
வெற்றிவேந்தரேசுவுக்கு
வெண்முடி சூட்டுங்கள்.

8 வாலிபர்கன்னிகைகளே
வந்து மகிழுங்கள்
சாலேமின் கூட்டத்தோடு
மேல்முடி சூட்டுங்கள்.

9 ஏசுவென்ற நாமத்திற்கு
எல்லோரும் பாடுங்கள்
ராஜனேயவர் தலைக்கு
நன்முடி சூட்டுங்கள்.

10 சகல கூட்டத்தார்களே
சாஷ்டாங்கம் செய்யுங்கள்
மகா அரசரிவரே
மாமுடி சூட்டுங்கள்.

11 மங்கல செம்பு பொன்னைவிட்டு
வானேரண்டைக்கு வந்தேன்
முண்முடி பெற்ற தலைக்கு
வண்முடி சூட்டுங்கள்.

## III.

1 இன்றேசுயிர்த்ததால்
எக்காள ஓசையால்
விண் மண்ணின் ராஜனைவரை
போற்றிப் பாடுவோம்.

2 சும்மனம்சார் போற்றும்
தங்கனேசுக்கென்றும்
இகலோகமீதிருந்து புகழ்
ஓங்குவதாக.

3 சேனபதியாய்
முன் செல்வதற்காய்
மரித்து உயிர்த்தோர்களில்
முதற்பலனானர்.

4 கிறிஸ்துவுடனன்
மரித்ததுண்டானல்
அவருடனெழுந்திருப்பேன்
என்று நம்புவேன்.

5 இந்த நம்பிக்கை
என்னிருதயத்தை
நடத்தி சீர்ப்படுத்தி
நேராயும்மில் சேர்க்கவும்.

6 ஜெகநாதன் வார்த்தையை
இகம்பொய்யாம்படி
யூதர் அடக்கிமுத்தரித்தும்
உயிர்த்தெழுந்தார்.

7 பொன் முடியணிந்த
இம்மானுவேலனே
நின்போல் கிரீடம் நானும் தரிக்க
கிருபையளியும்.

## IV.

1 யூதராஜசிங்கம் உயிர்த்தெழுந்தார்
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்.

2 வேதாளக்கணங்கள் ஓடிடவே
ஓடிடவே உருகிவாடிடவே.

3 வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனை துதித்திடவே.

4 மரணசங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன.

5 எழுந்தாரென்ற தொனி எங்கும் கேட்குதே
எங்கும் கேட்குதே பயத்தை என்றும் நீக்குதே.

6 மாதூதரைக் கண்டகமகிழ்ந்தார்
அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார்.

7 சீஷர் ஆதிவாரம் தெரிசித்தாரே
தெரிசித்தாரே தோமாவோ பரிசித்தாரே.

8 மரித்த கிறிஸ்துயினி மரிப்பதில்லை
மரிப்பதில்லை இனி மரிட்பதில்லை.

9 பாவத்திற்கென்றொருதரம் மரித்தார்
தரம் மரித்தார் ஒரேதரம் மரித்தார்.

10 கிறிஸ்தோரே அவர் பாதம் பணிவோம்
பாதம் பணிவோம் பதத்தைச்சிரமணிவோம்.

V.

பல்லவி.

சுபஜெயமங்களமே - நித்திய - சுபஜெயமங்களமே
சுகமே - தாவே - புவிமீ - துயிர்த்த - சுதனே சுநாதருக்கே.

சரணங்கள்.

1 தீர்க்கருரைத்தனரே - இன்று
ஜேசு உயிர்த்தனரே
ஜெகதீஸ் - பரனார் - சுதனார் - கிறிஸ்து
ஜெயமா யெழுந்தவர்க்கே.

2 தூதர் சங்கமுழங்க - வானம்
ஜோதியினாலிலங்க
துரிதாய் - பரனார் - களிர்கூர்ந் - திடதவ
தொனியா யெழுந்தவர்க்கே.

3 அங்கங்குளிர்ந்திடவே - உல
கெங்குமகிழ்ந்திடவே
அடியா - ருடசா - வுடகூ - ரொடித்து
அகில மெழுந்தவர்க்கே.

4 பயமெனக்கேன்மனமே - யேசு
பாக்கியனைத்துதி தினமே
பரமே - கிடவே - விசுவாசிகட்கு
பாதை காட்டுபவர்க்கே.

5 காலையிலே யெழுந்து - நிதம்
கர்த்தனையே நினைத்து
கரமே - குவித்து - துதிபாடிடவே
காலை யெழுந்தவர்க்கே.

6 ஆனந்தம் பாடவும் - பர
னன்பைக்கொண்டாடிடவும்
ஆசையா - நிலையோ - டெழுந்து - தொழவே
அருள் கூர்ந்திடுபவர்க்கே.

7 எக்காளமே தொனிக்க - பக்தர்
யாவருமேகளிக்க
இனிதா - யரசா - ளவுமே - யுலகில்
வருமிம்மானுவேலர்க்கே.

ஞான கீதங்கள்.

80, 81, 84, 85, 87 பாடப்படும்.